செ.வெ.எண்: 09/ஜுலை நாள் : 05.07.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## சமூக பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் நலிந்த கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் மொத்தம் 12 நலிந்த கலைஞர்களுக்கு ஓய்வூதியமாக மாதந்தோறும் ரூ.1,500/- பெறுவதற்கான ஆணை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (05.07.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் நலிந்த கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் மொத்தம் 12 நலிந்த கலைஞர்களுக்கு மூன்று மாதங்களுக்கான ஓய்வூதியத் தொகையாக தலா ரூ.4,500/- வீதம் மொத்தம் ரூ.54,000/-க்கான காசோலைகளையும், தொடர்ந்து மாதந்தோறும் ஓய்வூதியத் தொகையாக ரூ.1,500/- பெறுவதற்கான ஆணைகளையும் வழங்கினார்.

தமிழ்நாடு அரசு, பாரம்பரியம் கலைஞர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திடும் வகையில் நலிந்த கலைஞர்களுக்கு ஓய்வூதியமாக மாதந்தோறும் ரூ.1,500/- வழங்கிட உத்திரவிட்டுள்ளது. அதனடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் 2015-2016-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் 12 நலிந்த கலைஞர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதன்படி பரமக்குடியைச் சேர்ந்த ஓவியக்கலைஞர் திரு.என்.கற்பூரசுந்தரம், எமனேஸ்வரத்தைச் சேர்ந்த தவில் கலைஞர் திரு.பி.முனியசாமி, இடைச்சியூரணியைச் சேர்ந்த இசை நாடக கலைஞர் திரு.க.இராமுத்தேவர், கீழக்கோட்டையைச் சேர்ந்த ஒயிலாட்டக் கலைஞர் திரு.எம்.ராமகிருஷ்ணன், இடைச்சியூரணியைச் சேர்ந்த இசை நாடக கலைஞர் திரு.வி.நந்தகுமாரன், மஞ்சூர் கிராமத்தைச் சேர்ந்த இசை நாடக கலைஞர் திரு.சொ.சுப்பிரமணியன், எமனேஸ்வரத்தைச் சேர்ந்த தவில் கலைஞர் திரு.கோ.அழகு, காந்தி காலனியைச் சேர்ந்த தவில் கலைஞர் திரு.முனியாண்டி, மேலப்பார்த்திபனூரைச் சேர்ந்த தவில் கலைஞர் திரு.பு.கணேசன், எமனேஸ்வரத்தைச் சேர்ந்த நாதஸ்வர கலைஞர் திரு.ப.ஏசையா, ஆப்பனூர் கிராமத்தைச் சேர்ந்த இசை நாடக கலைஞர் திரு.இரா.கருப்பையா, எமனேஸ்வரத்தைச் சேர்ந்த நாதஸ்வர கலைஞர் திரு.பி.ஜோசப் ஆகிய 12 நலிந்த கலைஞர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,500/- வீதம் 3 மாதங்களுக்கான ஓய்வூதியத் தொகையாக தலா ரூ.4,500/- க்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து ஓய்வூதியம் பெறும் நலிந்த கலைஞர்களுக்கான ஓய்வூதியத் தொகை ரூ.1,500/- அவர்களது வங்கிக் கணக்கில் ஈ.சி.எஸ் (ECS) மூலம் வழங்கப்படும்.

இந்நிகழ்வின் போது சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.முருகசெல்வி உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**